செய்தி வெளியீடு எண்: 236 நாள்: 10.03.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.3.2019) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மதுரை மாவட்டம், மதுரை மற்றும் உசிலம்பட்டி வருவாய் கோட்டங்களை சீரமைத்து திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருமங்கலம் வருவாய் கோட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு, திருமங்கலம், கள்ளிக்குடி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கிய புதிய வருவாய்க் கோட்டம் ஒன்று 2019–2020ஆம் ஆண்டில் உருவாக்கப்படும் என்று 2019–2020ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை மற்றும் உசிலம்பட்டி வருவாய் கோட்டங்களை சீரமைத்து, திருமங்கலம், கள்ளிக்குடி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கி, திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருமங்கலம் வருவாய் கோட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர் மற்றும் சேத்துப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் – பல்லாவரம் ஆகிய இடங்களில் 7 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள், புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடியில் 2 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் காலியாகவுள்ள 35 இளநிலை உதவியாளர் மற்றும் 23 தட்டச்சர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று ஒரு நபருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.3.2019**